செய்தி வெளியீடு எண் : 2220 நாள் : 06.11.2023

# செய்தி வெளியீடு

அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம் யுபிஎஸ்சி முதல் நிலைத் தேர்வுக்கான பயிற்சியை நடத்தி வருகிறது. தமிழ்நாடு முழுவதும் நுழைவுத் தேர்வு நடத்தி 325 ஆர்வலர்கள் (225 முழுநேர மற்றும் 100 பகுதிநேர ஆர்வலர்கள்) தேர்வு செய்யப்பட்டுள்ளனர். யுபிஎஸ்சி முதல் நிலைத் தேர்வுக்கான பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆர்வலர்களுக்கு முதன்மைத் தேர்வை எதிர்கொள்ள மூன்று மாதங்களுக்கு (ஜூலை முதல் செப்டம்பர் வரை) தீவிர பயிற்சி அளிக்கப்படுகிறது. முதன்மைத் தேர்வு பயிலும் ஆர்வலர்களுக்கு மாதம் ரூ.3000/- வருமான உச்சவரம்பைப் பொருட்படுத்தாமல் படிக்க தேவையான புத்தகங்களை வாங்குவதற்கு வழங்கப்படுகிறது.

அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம் ஜனவரி மாதத்தில் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆர்வலர்களுக்கு மாதிரி ஆளுமைத் தேர்வை நடத்துகிறது. மனித வள மேலாண்மை (Training-1) Dept, GO (Ms) No.68, Dt.08.07.2022-ன் படி அவர்களுக்கு ஆளுமைத் தேர்வில் கலந்துகொள்ள ஏதுவாக மற்றும் இதர பயண செலவுகளுக்கு ரூ.5,000/- வழங்கப்படுகிறது.

குடிமைப் பணித் தேர்வு எழுதும் (UPSC) ஆர்வலர்களின் நலனுக்காக YouTube சேனல் தொடங்கப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. YouTube சேனல் இதுவரை 97,800 சந்தாதாரர்களைக் கொண்டுள்ளது மற்றும் இதுவரை 31,77,798 பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர்.

முதல்நிலை, முதன்மை மற்றும் ஆளுமைத் தேர்வுகளுக்கு பயன்படும் வகையில் மின்னணு புத்தகங்களை ஒரே நேரத்தில் 100 ஆர்வலர்கள் படிக்க ஏதுவாக வசதி வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 7,500-க்கு அதிகமான நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் அடங்கிய MAGZTER சந்தா செலுத்தப்பட்டு அனைத்து ஆர்வலர்களும் பயன்படுத்த வசதி வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு மனித வள மேலாண்மை (பயிற்சி-1) துறை GO (MS) எண் 71, வாயிலாக ரூ.1,17,96,383/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது நிரந்தர கூடுதல் உணவுக் கூடம், மற்றும் இதர பணிகள் நடைபெற்றது. தற்பொழுது புதிதாக கட்டப்பட்ட கூடுதல் உணவுக்கூடத்தினை கூடுதல் தலைமைச் செயலாளர் / பயிற்சித்துறைத்தலைவர் திரு. விக்ரம் கபூர் இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து 2024 முதல்நிலை தேர்வுக்கான பயிற்சி வகுப்பினை இன்று (06.11.2023) தொடங்கிவைத்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in